தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ஞு மார்கழி மீ 2உ (17-12-'22.) | ப. 33

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 347
(உதவி பத்திராதிபர்)

2. இயற்பகை நாயனுர் ... 348
(துகளன் எழுதியது)

3. மானிட வியல்பின் நூல் ... 348
(பூகோள சாஸ்திர நிபுணர்)

4. நம் தபால் சேவகத்தின் சரிதம். 349
(R. பஞ்சாபகேசன்)

5. மனிதர் வாய்ப்படும் அகில உலக உயிர்ப் பிராணிகள் மகாநாடு ... 350
(காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தார்)

6. காபி ஹோட்டல் குருவானது. 354
(B. ராமஸ்வாமி)

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை
பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விவரம்:—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றிய குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்,
மைலாப்பூர், சென்னை.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்
எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல, ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் டி. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

உம்மிடி
ராமய்யசெட்டி
குருசாமிசெட்டி
கம்பெனி

நம்பிக்கையான நகை வர்த்தகர்கள்
25, சைனுபஜார் ரோட், மதராஸ்

ఉమ్మిడి రామయ్య శెట్టి, గురుసామి శెట్టి
కంపెనీ
నగల వర్తకులు
25, చైనా బజార్ రోడ్డు, మదరాసు.

துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமிமுதலியார் எழுதியது

	ரூ.	அ.
இந்திரா பாய் ...	2	8
அல்லது இந்திரஜாலக் கள்வன்		
சுந்தர சிங் ...	1	8
அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை		
அம்புஜாக்ஷி ...	2	0

வி. நாராயணன் கம்பெனி,
4, கொண்டிசெட்டி தெரு, மதராஸ்.

24 மணிநேரத்திற்குள் குணம்

உலகப் பிரசித்தி பெற்ற வி. ஜி. என். அவர்களின் ரிங்குவரம் லோஷன் உபயோகிப்பதினால், எல்லாவித படை, எச்சத்தளிம்பு, மேகபடை, இவைகள் 24 மணி நேரத்திற்குள் நீங்கும். நிகரற்ற நற்சாட்சி பத்திரங்கள் பெற்று இருக்கிறது.

		புட்டி-1க்கு	0-10-0
சிகப்பு வாசனை சாந்து	,,	,,	0-4-0
கருப்பு வாசனை சாந்து	,,	,,	0-4-0
சிகப்பு மார்கு இங்கி துணிகளுக்கு குறிபோடுவது			0-4-0

விலாசம்.

மார்டன் அண்டு கம்பெனி,
13, கிருஷ்ணப்ப நாயகன் அகிரஹாரம்,
மிண்டு பில்டிங்குஸ், மதராஸ்.

தமிழகம்.

மலாய் நாட்டின் தனித்தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய் பிரதி திங்கள் வியாழக்கிழமைகள் தோறும் வெளிவருகிறது. நம் தமிழ் நாட்டிலிருந்து பினங், சிங்கபூர், மலாக்கா முதலிய பிரதேசங்களை உளப்படுத்திய மலாய் நாட்டில் குடியேறவும் பிழைப்புக்காகவும் வந்திருக்கும் தமிழ் ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக் காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இது ஐக்கிய மலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூர் பத்து ரோட்டில் 186, 188, 190-ம் நெம்பர் கட்டடங்களில் அமைக்கப் பெற்றிருக்கும் இண்டஸ்திரியல் அச்சுக்கூட ஸ்வான்தார் ஸ்ரீமான் சி. செல்லத்தம்பி அவர்களால் தேர்ந்த தமிழறிவாளிகளைக் கொண்டு நடத்தப்படுவது. இஃது மலாய் நாடு, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில விஸ்தாரமாய்ப்பரவுகின்றது. இதன் வருட சந்தா றிங்கி 10.00 மாதத்திற்கு றிங்கி 5.50. இந்தியா, பர்மா, இலங்கை நாடுகளுக்கு வருட சந்தா ரூபா 15. ஆறு மாதங்களுக்கு ரூபாய் 8.

மானேஜர், "தமிழகம்" ஆபீஸ்'
நெம்பர் 190, பத்து ரோட், கோலாலம்பூர்.

சூளாமணி வசனம்

ஜைன காவியங்களுள் ஒன்றாகிய சூளாமணி இனிய வசன நடையில் யாவரும் எளிதில் படித்து ஆனந்தமடையுமாறு, கடலூர் டவுன் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ந. பலராமையர் அவர்களால் இயற்றப்பட்டு உயர்ந்த கடிதத்தில் பெரிய எழுத்துக்களில் அரும்பத வகராதியுடன் பிரசுரிக்கப்பெற்றுளது.

"இதன்கண் நிகழும் சொற்றொடர்களும் அரும் பதங்களும் வர்ணனைகளும் மிகவும் சிறந்து பொலிவுற்றிருக்கின்றன. தமிழின் சிறப்பும், தமிழ் மொழியின் இனிமையும், மலரிடை மதுவெனச் சொரிந்து கிடக்கின்றன. இதில் கதா நாயகனை காயாம்பூமேனியான கண்ணனுக்கு உவமைகாட்டியிருப்பது மிகப்பொருத்தமாக இருக்கிறது. இதில் வரும் அரும்பதங்களை விளக்கும்பொருட்டு அரும்பத வகராதி ஒன்றும் இறுதியில் சேர்க்கப் பட்டுள்ளது. சமயத்திற்கேற்ப சூளாமணி காவியத்தினின்று செய்யுள்களும் இடையிடையே முத்தும் பவழமும்போல் அலங்கரிக்கப் பெற்றிருக்கின்றன. இப்புத்தகம் தமிழ்கற்க விரும்பும் ஆடவருக்கும் மகளிருக்கும் ஓர் சிறந்த கைப்புத்தகமாகும்"

பெண் கல்வி.

இதன் விலை ரூபா 1-0-0.

கணேஷ் கம்பெனி,
39, தம்பு செட்டி தெரு, சென்னை.

உலக நடை

[உதவி பத்திராதிபர்]

நமது சென்னை இராஜதானியில் வசிக்கும் பல பிரபல காங்கிரஸ் கட்சியினர், சட்டஸபை புகுந்து ஒத்துழையாமையை நடத்துவதே காலதிற்கேற்றதென ஓர் நிருபத்தை கயை காங்கிரஸ் அக்கிராஸனாதிபதிக்கு விடுத்துள்ளார். இவர்களுடைய மனப்பான்மையைக் குறித்து யாதும் குற்றம் கூறவில்லை யாயினும், இவர்கள் பற்றியுள்ள முறை நாட்டிற்கு நன்மையை விளைவிக்காதெனவே சொல்ல வேண்டும். ஒத்துழையாமை எவ்வித கஷ்டத்திற்குள்ளாகினும் சட்ட ஸபைக்கு வெளியே தான் நிகழல் வேண்டும். இவ்விரண்டு வருஷ காலத்திற்குள்ளாக ஒத்துழையாதார் தங்கள் நோக்கங்களை நிறைவேற்றக் கூடவில்லை யென்பது ஒத்துழையாமை முறையின் குறையாலல்ல. ஒத்துழையாதார் பலரின் உறுதியின்மையே இதற்குக் காரணம். உறுதி யற்றவர்கட்கு முறையை எவ்விதம் மாற்றினும், பயன் படாது.

ஒத்துழையாமையைத் தாக்கும் விரோதிகள், ஒத்துழையாமை அழிக்கும் முறைகளையே கைக்கொண்டிருக்கிறதெனவும், நிர்மாண முறைகளை யாதும் பற்றவில்லை யெனவும், இதை உணர்ந்து தான் பலர் முறைகளை மாற்ற நோக்கங் கொண்டிருக்கிறார்களெனவும் சொல்லி வருகிறார்கள். அறிக்க வேண்டிய ஸ்தாபனங்களை அழித்த பின்னரே, நிர்மாணம் செய்ய வேண்டிய ஸ்தாபனங்களை நாட்ட வேண்டும். பொது ஜனங்களுடைய உரிமைகளை நியாயப்படி காப்பாற்ற சக்தியும் விருப்பமு மற்ற ஸ்தாபனங்களை யழிப்பதே முதற் கடமை. இதனிடையே பொது ஜன உரிமைகளைப் பாதுகாக்க ,ஏற்பட்டிருக்கும் காங்கிரஸ் ஸ்தாபனம் நிர்மாண வேலைகளை சமயத்திற் கேற்றவாறு அமைத்துவரும். இவ்வழிவு நிர்மாண வேலைகள் ஒழுங்காயும் அமைதியுடனும் நடந்தேற வேண்டுமென்றே ஒத்துழையாதார் பாடுபட்டு வருகிறார்கள். சாத்வீக போராட்டமே இந்தியர்களுக்கு ஓர் பூஷணம்.

அமெரிக்கா என்ற யுனைடட் ஸ்டேட்டில் சில மாதங்கள் முன்னதாக வேலையாளர்களுக்கு வேலை கிடைக்காமல் இருந்துவந்தது. இப்பொழுது வேலையாளர் தேவையானவரை கிடைக்கவில்லை யென தொழிற் சொந்தக்காரர்கள் கூக்குரலிடுகிறார்கள். இதன்பொருட்டு தங்கள் தேசத்தில் அந்நிய நாட்டார் வந்து குடியேறும்படி குடியேற்றச் சட்டத்தைத் திருத்தி அமைக்க முற்பட்டிருக்கிறார்கள். ஆயினும் குடியேறியவர்களுக்கு தங்களுடன் சமமான உரிமைகளைக் கொடுக்க இணங்குவதாக தோன்றவில்லை. இப்போது அமெரிக்காவி லிருக்கும் ஜனங்கள் பற்பல சமயங்களில் வெவ்வேறு தேசங்களிலிருந்து குடியேறியவர்கள் என்பதை மறந்துவிட்டார்கள் போலும். கானடா, ஆஸ்டிரேலியா, நியூ சிலண்டு, தென்னபிரிகா முதலிய நாடுகளுக்கு குடியேறிய இந்தியர்களுடைய குறைகளை சமாதான வார்த்தைகளால் சீர்திருத்தச் சென்று இவ்விடம் திரும்பிய ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள் அவர்கள் தன் பிரயாணத்தினுடைய பலனைப் பற்றி இப்போது பலவிடங்களில் பேசி வந்திருக்கிறார். உடனே பலன் ஏற்படாமலிருநதாலும் நாளடைவில் பலன் கிடைக்குமென்ற நம்பிக்கை யிருக்கிறதாம்.

வர்த்தக சங்கங்கள் பல விடங்களிலும் தொழிற் காப்புச் சுங்கத்தை எதிர்த்து வருகின்றன. வர்த்தக சங்கங்களின் அங்கத்தினர்களோ அந்நிய நாடுகளுடன் வியாபாரத்தையே பெரிதும் கைக்கொண்டு திரவியம் சம்பாதிப்பவர்கள். ஆகையால் தங்கள் வியாபாரத்தைக் கெடுக்கும் எந்த முறையையும் ஆதரிக்கமாட்டார்கள். ஆனால் இவர்கள் வாதங்களை நாட்டினுடைய நலத்திற்காக வெனப் பொருட்படும்படி எடுத்துரைப்பது நியாயமல்ல. அந்நிய நாட்டுச் சரக்குகளை அனுபவிக்கும் ஜனங்கள் இச்சுங்க வரிகளால் வருந்துவார்களெனச் சொல்லுகிறார்கள். அவ்விதமே வருந்தி, அச்சரக்குகளின் மேலிருக்கும் பற்றை ஜனங்கள் நீக்க வேண்டு மென்பதே எமது நோக்கம். அந்நிய நாட்டிலிருந்து சரக்குகள் இங்கு வராமலிருந்தால் உணவு பொருட்கள் விலையில் தாழ்வு அடையும். அதனால் ஏழை ஜனங்கள் சுகம் பெறுவார்கள். முன்னதாக சுகம் பெற்று பின்னர் வருந்துவதை விட முன் வருந்தி பின் சுகமடைவதே பெரிதாகக் கருதுகிறோம்.

ஜர்மனியின் நஷ்ட ஈடுகளைப் பற்றிய விவாதமே ஐரோப்பாவில் இவ்வாரம் தீவிரமாய் நடைபெறுகிறது. ப்ரஞ்சுக்காரர்கள் ஜர்மனியின் சில பிரதேசத்தை ஜாமீனாக தங்கள் கைவசத்தில் வைத்துக் கொள்வதானல் மட்டும், நஷ்ட ஈடுகளின் தவணையை மாற்றக் கூடு மென்பதாகச் சொல்லுகிறார்கள். ஜர்மானியரோ தங்கள் தேசப் பொருள் நிலையை சீர்திருத்தி பிறர் மதிக்கும்படி உயர் நிலையில் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், அவ்வாறு செய்தால் தங்களை நம்பி கடன் கொடுப்பவர்கள் கடன் கொடுக்க முன் வருவார்கள் என்றும், நஷ்ட ஈட்டைச் செலுத்த வேண்டுமானால் நேச தேசத்தார் பற்றியிருக்கும் ஆதீனத்தை விட்டுவிட வேண்டு மெனவும் சொல்லுகிறார்கள். கடனாளிகளிடமிருந்து கடனைத் திரும்பப் பெற எண்ணுகின்றவர்கள் கடனாளிகள் தங்கள் கஷ்ட நிலையை சீர்திருத்தி முன்னேறக் கருதும் முறைகளுக்கு தடை யாதும் செய்யாமல் நடந்து கொள்ள வேண்டு மென்பது யாவரும் ஒப்பக்கூடும். முன்னேற்றம் அடைந்து விடுவார்களே யென்ற பொறாமை மேலிட்டால் கடனும் வசூலாகாது. தாங்களும் வருந்தி கடனாளியும் வருந்த வேண்டிவரும்.

பாரிஸில் வித்தியாபி விருத்தியை நாடி கூடிய காங்கிரஸில் சிறுவர்களுக்கு படிப்பை புகட்டுகையில், தொழில் முறைகளையும், யந்திரங்களையும், விவசாய விஷயங்களையும் சினிமா படங்களால் விளக்கிக் காட்டுவதே உபயோகமுள்ள படிப்பு முறையாகத் தீர்மானம் செய்திருக்கிறார்கள். நேரிற் பலவிடங்களுக்குப் போய் கண்களால் பார்த்[illegible] வதற்கு ஒப்பான படிப்பு உயர்ந்த தென யா[illegible] அறிவார்கள். கண்கள் பலவற்றைக் காண்கி[illegible] பார்த்தபடியே நாவால் உரைக்க இய[illegible] கைதேர்ந்த ஆசிரியர்களாலும் விளக்கமு[illegible] படிப்பினை சினிமா படங்கள் ஊட்டு மன்[illegible]

இதன் தொடர்ச்சி 355-ம் பக்கத்தில் [illegible]

இயற் பகை நாயனர்.

[துகளன் எழுதியது]

செய்தவர்வேண்டிய தியாதுங்கொடுப்பச் சிவன்றவனுய்
கைதவம்பேசி நின்காதலியைத் தருகென்றலுமே [க்
மைதிகழ் கண்ணியை யீர்தவன் வாய்ந்த பெரும்புகழ்வந்
தெய்திய காவிரிப்பூம் பட்டினத்து னியற்பகையே.

—திருத்தொண்டர் திருவந்தாதி.

காவிரிப்பூம் பட்டினத்தில் வைசியர் குலத்தில் பிறந்து சிறந்த சிவபக்தராய் வளர்ந்து வந்த இவ்வடியார் யாதுமொன்றும் என் பக்கல் உண்டாகில் அன்னது எம்பிரானடியவர் உடைமை எனக்கொண்டு நீறணிந்தவர் தம்மிடம் வந்தக்கால் அவருக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் கொடுக்கும் பெரும் வள்ளலாய் வாழ்ந்து வந்தார்.

இவரது மனோதிடத்தையும் சற்றும் தயங்காத ஈகைக் குணத்தையும் விளக்கவாராய் ஈசனார் சிவபக்தவேடம் தாங்கி இவரிடம் வரவே இயற்பகையார் வரவேற்று தம்மிடமிருப்பவற்றுள் யாதேனும் கேட்டு வாங்கிக்கொண்டு தம்மை கிருதார்த்தராக்கவேண்டு மென்று வேண்டினர். அப்போது "நின் காதல் மனைவியை எனக்கு அளிக்கவேண்டும்" என்று காமாதுரர்போல் தவவேடத்தர் வேண்டவே, இல்லையே என்னாத இயற்பகையாரும் சோராமல் தந்தேன் என்று தம் மனைவியைக்கூவி "உன்னை இவருக்கு ஈந்தேன்; நீ இனி இவர் பின் செல்லக்கடவை" என்றார். மனைவியும் விதி வலியை நினைந்து மனநொந்தாள் எனினும், கணவனைத் தொழுது நிற்பவளாதலால் உடன்பட்டாள்; "ஈகை பெரிதன்று, கொடுத்தது நிலைக்கும்படி காக்கவேண்டும்; நீ மனதார அளித்தும் பயன் படாதபடி உங்களுடைய உறவினரும் நண்பரும் தடைசெய்வார்களே. ஆகையால் என்னை ஊரெல்லை கடத்திவிட்டு வரவேண்டும்" என்றுதவவேடர் சொல்லவே, உடன் கையில் வாள்கொண்டு பலகை ஏந்தி அவர் பின் புறப்பட்டார். "இயற் பகையார் பித்தங்கொண்டார், தம்மனைவியை இவ்வாறு ஒருவன் அழைத்துச் செல்ல அவர் இசைந்தாலும் உற்றார்க்குரிய கடமை வருந்தீங்கை விலக்குவதன்றோ!" என்று ஊரார் இயற்பகையாரின் மனைவியை தூர்த்தவேடம் கொண்டவர் அழைத்துச் செல்லாவண்ணம் தடுக்க, அவர்களை தன் வாள் வலியால் தடுத்து ஈசனார் முன்செல்ல, தம்மனைவி அவர் பின்செல்ல, இருவரையும் காத்து சென்றார் வள்ளலார்.

ஊரெல்லை கடந்து அருகிலுள்ள சாய்க்காட்டிலுள்ள திருக்கோயில் அணுகியதும் இயற் பகையார் விடைபெற்றுக்கொண்டு தம் நகர் நோக்கித் திரும்பவே, ஈசனார் "அபயம், இபற்பகையே" என்று ஓலமிட்டு, அவர் "இதோ வந்தேன், யார் நும்மை கடுப்பவர்" என்று திரும்புமுன் மறைந்தார்.

னே, "இவையெல்லாம் ஈசனார் திருவிளை
ன்று உணர்ந்த வள்ளலாருக்கு முன்
விடையேறி வந்து நாயனரை
நக்க அழைத்துச் சென்
ாம்.

க்கவேண்டிய
டால்
தல்ல;
. விரதத்
றுமேனும்
தும் அவன்
ர்குலையாமல்

நிலைநிறுத்தினுல் இறுதியில் நன்றேயாக முடியும் என்பதுமே. கர்ணன் தனக்கு உயிர் நிலைபோலிருந்த கவசகுண்டலங்களை தன்னுடலினின்றும் சேதித்துக் கொடுத்தது போலவும்; இது மோசடி என்று சுக்கிராச்சாரியார் தடுத்து நின்றபோதும் பலிச்சக்கிரவர்த்தி ஈயாதிரேன் என்றது போலவும்; தசரதர், இராமனைத் தாவென்று கேட்ட முனிவருக்கு இலக்ஷ்மணனையும் உடன் அளித்தது போலவும் ; ஈகை விரதத்தை மேற்கொண்டவர் உயிரை வேண்டினும், உயிரினும் உயர்ந்த தாரம் தனயன் இவர்களை வேண்டினும் கொடுத்துதவுவது கடமை ; தாம் கொண்ட பொய்யா விரதத்தைக் காக்க ஹரிச்சந்திரன் தன் மனைவியை அடிமையாக விற்று தன்னையும் பிறகு விற்றான் அன்றோ ?

ஆகவே, நாம் மனச்சஞ்சலமின்றி உண்மைவழி என்று மேற்கொள்ளும் விரத மார்க்கத்தில் இடையூறுகள் ஏற்படுகின்றனவே என்று தயங்காமல், இவை கேடு விளைப்பனவோ என்று பின் வாங்காமல், உறுதியாய் இருக்க வேண்டும் என்பதே இவரது சரிதத்தால் நாம் அறியும் விஷயம். பிறர் வஞ்சனையாக வேடம் பூண்ட போதிலும், அவர்கள் உண்மையாக வந்து யாசிப்பவரா அல்லது கபடமாய் மோசஞ்செய்யும் கருத்துடன் வந்தவரா என்று ஆராய்ந்து ஈவதைவிட யார் வந்து எக்கருத்துக் கொண்டேனும் எதைக் கேட்பினும் இல்லையே என்னாத விரதமே மேல் என்று கொண்டு கர்ணன், இயற்பகை இவர்கள்போல் இருப்பது எவ்வளவு அரிது என்று உணர்ந்தவருக்கு இந் நாயனரின் பெருமை நன்கு விளங்கும்.

மானிட வியல்பின் நூல்.

[பூகோள சாஸ்திர நிபுணர்.]

நாம் பலதேசங்களில் வாழும் மனிதர்களையும் அவர்களுடைய நடையுடை பாவனைகளையும் ஆராய்ந்து நினைக்குங்கால், இவ்வேறுபாடுகளுக்கெல்லாம் மனிதர்களைச் சுற்றியிருக்கும் பூபாகமும், சீதோஷ்ண ஸ்திதியும் ஜங்கம ஸ்தாவர வர்க்கங்களும் காரணமெனத் தெளிவாய்ப் புலப்படக்கூடும். உதாரணமாய், நாம் ஓர் மனிதனிடம் அவர் பிறந்த ஊரைப்பற்றி விசாரித்தாலே, அவருடைய பல சுபாவங்கள் இன்னவெனத் தெரிந்து கொள்ளுகிறோம். அல்லது, முகத்தைப் பார்த்த மாத்திரத்திலே இவர் இந்த ஊரினராயிருக்கக்கூடும், இவருடைய தொழிலும் இத்தகைமையதே, கூடிப்பழகும்போது நாம் ஜாக்கிரதையுட னிருக்க வேண்டிய முறைமைகள் இவ்வாறுயதே வென அறிகிறோம். இவ்விதமாக நாம் கேட்காமலேயே பல விஷயங்களை அறிந்து கொள்ளும் சக்தி படைத்திருப்பது நாம் பலவிடத்தில் பழகி புத்தியை உபயோகித்தறிந்த அனுபவத்தாலேயே. இவ்வனுபவங்களிலிருந்து அறியக்கூடியதும் காலதேச வர்த்தமானங்களுக் கேற்றவாறு மானிடவியல்பு மாறுபாடடைவதை விளக்குவதுமான நூல் ஒன்று உளது. அந்நூலை யமைத்து பயனடையக் கருதுவது நியாயமே. இந்நூலைக் கற்றதாலோ பலர் மானிட வியல்பை ஊஹித்தறிகிறார்கள் எனச் சிலர் வினவலாம். உலகத்தில் விஷயங்களைப் புகட்டும் நூற்கள் பல வுள வென்பது யாவரும் அறிந்ததே. ஒவ்வொரு நூலும் ஒவ்வொருவிதப் பொருட்களை விரிக்கும். நூலை ஓர் ஆசிரியனிடம் பணிந்து கற்காது நூலின் பொருளை சிறிது அறிந்தோரும்

உளர். அவர்கள் உலக அநுபவத்தால் அறிந்தவ ராவர். உதாரணமாக, ஒருவர் தர்க்க சாஸ்திரம் பயிலாமல் தர்க்கமாக (அதாவது முன் பின் விரோதமன்னியில்) வாதாடக்கூடும். வியாகரண சாஸ்திரம் கற்காமல் எழுத்துப் பிழை சொற் பிழை இராது ஒருவன் பேசவோ எழுதவோ கூடும். விவசாய நூல் கற்காமல் எத்துணையோ உழவர் உழவு தொழிலை யொழுங்காய் நடாத்துகிறார். இவ்வளவும் நூலின் பயனின்மையை விளக்குவதாகாது. நூலென்பது சிறிது சிறிதாக அநுபவமடைந்தோரால் பெருக்கப்படுகின்றது. நம் முன்னோர்களுடைய அநுபவங்களை சொற்களால் விளக்கி, அவற்றைப் பின்வரும் சந்ததியார் கேட்டும் படித்துமறிந்து தொழிலை மேற்கொண்டால் மேன்மேல் அத்தொழிலின் நூல் பெருகும். உலகத்தாருக்கும் பயன்படும். நூலைக் கற்காமல் தொழிலைக் கைக்கொள்ளுபவர்களுக்கு தங்களுடைய அநுபவம் மட்டுமே பயன்படும். ஆகவே மானிட வியல்பை விளக்கும் நூலொன்று இருப்பதையும் கண்டு நூற்களின் பயனையும் மதித்து இந்நூலை வரையக் கூடிய வழிகளை சிறிது சிறிதாக ஆராயப்புகுவோம். முதல் முதலாக நாம் பார்த்தறிந்த விஷயங்களை வரைவோம். அதாவது ஓர் புறத்தில் பல நாடுகளில் வசிக்கும் வெவ்வேறு மனிதர்களுடைய பக்ஷணபான ஆகாரங்கள், தரிக்கும் உடைகள், வாஸ வீடுகள், பிரயாண சாதனங்கள், இவைகளையும்; வேட்டையாடுதல், மீன் பிடித்தல், ஆடு மாடு மேய்த்தல், நிலம் பயிரிடுதல், விறகுவெட்டி ஜீவித்தல், சுரங்கவேலை செய்தல், கைத்தொழில், வியாபாரம் முதலிய தொழில்களையும்; ஜாதி வழக்கங்கள், குணங்கள், சுகாதாரம் முதலிய பழக்கங்களையும்; ராஜ்யபாரம், மதம், கல்வி முதலிய மேம்பாட்டையும் குறித்துவைப்போம். மற்றொரு புறம் அந்நாடுகள் இருக்கும் இடம், நிலத்தின் அமைப்பு, ஜலாசயங்களின் நிலை, நிலத்தின் செழிப்பு, சீதோஷ்ண ஸ்திதி முதலியவைகளையும்; நாடுகளின் விளைபொருட்களையும் ஸஞ்சரிக்கும் மிருகங்களையும், குறித்திடுவோம். இவ்வாறு இருபுறத்திலும் குறித்திட்டவைகளின் பரஸ்பராசிரயத்தை ஆராய்ந்து பார்த்தால் பல அரிய தத்துவங்களையும் உண்மைகளையும் கண்டு கொள்ளக்கூடும். உதாரணமாக ஆபிரிகாவின் மத்தியபாகத்தில் இருக்கும் ஜனங்கள் மிருகங்களை வேட்டையாடி ஜீவனம் செய்து வருவதாயும், நவீன நாகரிக முறைகளைக் கையாளாதவர்களாயும் கறுத்தமேனி படைத்தவர்களாயும் முரடர்களாயும் இருக்கக்காண்கிறோம். தேசத்தின் அமைப்பை கவனித்தால் ஸமுத்ரமாகிற ஜலாசயத்திற்கு அப்பால் வெகு தூரத்தில் மழை அதிகமாய் பொழிகிற இடமாகவும், உஷ்ணப்பிரதேசமாகவும், ஆகவே, செடி, கொடி, விருக்ஷங்கள் அதிக செழிப்புடன் மனிதர்களால் அழிக்க முடியாதவாறு விளைந்து பல மிருகங்களும் ஜந்துக்களும் வளர்ந்து பெருகிக் கிடக்கும் பூமியாகக் காண்கிறோம். இவ்விடத்தில் வேட்டையாடாமல் எவ்விதம் ஜீவனம் செய்யக்கூடும். பல தொழில்களைக் கைக்கொண்டும் அந்நிய நாட்டோடு வர்த்தகம் புரியக் கூடியதாயிருந்தாலல்லவோ நவீன நாகரிக முறைகள் தோன்றும். இவர்களை மற்றைய நாட்டார் அண்டாதபடி கடலுக்கு வெகு தூரத்திற்கு அப்பால் சுயேச்சை பெற்றுத் திரிபவர்களாயிற்றே. மத்திய ஆசியாவில் ஜனங்கள் ஆடு மாடுகள் வைத்து மேய்த்துக்கொண்டு பல இடங்களில் ஸஞ்சரிப்பவர்களாயிருக்கிறார்கள். இவர்களின் தேசத்தின் நிலைமை கவனித்தால், உழுது பயிரிட்டாலும் ஒன்றும் விளையாத பூமியாயும் மலைப்பிரதேசமாயும், மழை போதாததாயும் இருக்கின்றது. புல்லைத் தவிர வேறு யாதும் இவ்விடம் உண்டாவதில்லை. ஆகையால் இவர்களுடைய தொழில் இவ்விடத்திற் குரித்தாயிற்றன்றோ. இவ்விதம் உதாரணங்களைப் பெருக்கிற் பெருகும், விரிக்கின் விரியும்.

ஆகையால் நம்மவர்களில் ஒருவருக் கொருவர், இவன் தமிழன், அவன் தெலுங்கன் எனவும், இவன் தஞ்சாவூரான், அவன் திருநெல்வேலியான் எனவும், இவன் மலையாளி அவன் கொங்கணன் எனவும் ஹேளனம் பண்ணுவதற்காகவோ, அல்லது கர்வம் பூண்டோ, வார்த்தைகளாடுவதைவிட, இவ்வார்த்தைகளுட்டும் நூலினைக் கண்டறிந்து, கேட்டோர் ஒப்ப, விரித்துரைக்க முற்படுதல் நன்று.

நம் தபால் சேவகத்தின் சரிதம்

[R. பஞ்சாபகேசன்]

எல்லா தேசங்களிலும் அரசர்கள் தங்கள் நாடுகளின் பல பாகங்களில் நிகழும் செய்திகளை அறிந்து கொள்வதற்காக தபால் சேவகத்திற்கு வேண்டிய முறைகளைப் பற்பல விதமாகக் கையாண்டு வந்தனர். நம் இந்தியா தேசமோ மிகப் பெரியது. தேச சரித்திரத்திலிருந்து இவ்விந்தியாவில் பல இராஜ்யங்கள் இருந்து வந்ததையும், அவைகளுள் பல சமயங்களில் சச்சரவுண்டாகி அவைகளின் எல்லைகள் மாறுபாடடைந்ததையும், தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, நம் தபால் சேவகத்தின் முறைகளை யாராயப் புகுந்த நாம் சில விநோதக் கதைகளைக் கூறக்கூடுமே யென்பதைத் தவிர, இத்தேசத்தில் ஆண்ட எல்லா முறைகளையும் பற்றித் தெளிவாய் வரைய இயலாது. ஒவ்வோர் சமயம் ஒவ்வோர் இராஜ்யம் சிறப்பெய்து விளங்கினும், தபால் சேவகத்தின் முறைகள் பல விடங்களிலும் பல காலத்தும் அதிக வேறுபாடில்லாமல் அநுஷ்டிக்கப் பட்டனவென்றறிகிறோம். ரயில்வே, மோட்டார் முதலிய பல சாதனங்கள் இல்லாத காலத்தில் நிகழ்ந்த தபால் சேவகம் நமது அதிசயத்திற்கு உரிய ஓர் விஷயமே.

பண்டைக் காலங்களில் ஜனங்கள் வெவ்வேறு பகுதியினராக வெவ்வேறு இடங்களில் கூடி நிலையுற்று வந்ததாலும், அவரவர்களுக்கு வேண்டியவற்றை தாங்கள் தங்கிய தலத்தின் புறத்தே அடைந்து வந்ததாலும், தங்கள் பகுதியினருக்குள்ளேயே விவாக பந்தங்களை நடத்தியதாலும், கடிதப் போக்குவரவுக்குற்ற சாதனங்கள் தேவையாயில்லை. இதற்கேற்றவாறு இவர்களுடைய ஆசாரங்களும் நடையும் எழுதப்படிக்கக் கற்கவேண்டிய அவசிய முடைத்தனவாயில்லை. இவர்கள் சிறப்புற்று பயின்ற கலைகளெல்லாம் மனப்பாடமாகவே அமைக்கப் பட்டுள்ளன. பல சாஸ்திரங்களும் ஸூத்ர ரூபமாயும், செய்யுள் நடையிலும் நிர்மாணிக்கப்பெற்று விளங்கின. இந்நாட்களிலும் வேதங்கள் முதலியவற்றை எழுத்துப் புத்தகங்களிலிருந்து பார்த்துப் படித்துக் கற்கக்கூடாதென விதியும் இவர்களுடைய பண்டைய ஆசாரங்களை விளக்குகிறது. இக்காலம் கரையேறிய பின்னர் எழுத்தமைக்கப்பட்டு ஓலைச்சுவடிகளில் எழுதிப் பழகப் புகுந்தனர். பல இராஜ்யங்கள் தோன்றி அரசு வழங்கும் காலத்தில் நிருபங்கள் மணவோலைகள் முதலியவற்றை அவ்வோலைகள் விடுத்

தவர்களை தூதர்களை அமர்த்தி அவைகளை சேர்க்க வேண்டிய இடங்களில் சேர்க்கும்படி ஆக்ஞை யிட்டார்கள். அரசர்கள் தங்கள் பிரசுரங்களை பறையடித்தும் சாஸனங்களையும் நிருபங்களையும் தூதனுப்பியும் செய்துவந்ததை புராணங்களில் பரக்கக் காண்கிறோம். அந்நிய நாடுகளிலிருந்து செய்திகள் யாத்ரிகர்களால் இங்கும் அங்கும் கொண்டு போகப்பட்டு வந்தன. க்ஷேத்திர யாத்ரிகர்கள் ஓரிடமிருந்து மற்றொரு இடம் போவது திருடர்களாலும் அநீதியாலும் தடைபட்டு, தபால் முறை நிர்மாணிக்க நேர்ந்தது. வெளி நாடுகளிலிருந்து சத்துருக்கள் படை யெடுத்து இராஜ்யங்களைக் கவர்ந்து ஆட்சி செலுத்துகையில், செய்திகள் பல விடமிருந்து சீக்கிரத்தில் அரசர்களிடம் எட்ட வேண்டிய அவசியமேற்பட்டு, ஒருவாறு உபயோகமுள்ள முறை அனுஷ்டிக்கலாயிற்று.

முகமத் பின் டாக்லக் அரசாண்ட காலத்தில் இபின் படோடா வட இந்தியாவில் சுற்றிப் பார்த்து கண்டதை வரைந்துள்ள குறிப்பிலிருந்து, தபால் சேவக விஷயமாய் தபால்களை தனியே தூக்கி ஓடுகிற காலாட்களும், குதிரையேறிக்கொண்டு போகுபவர்களுமாக இருவித முறைகள் கையாடியதாயும்; காலாட்கள் ஒவ்வொரு மைலுக்கு ஒருவர் அமைக்கப்பட்டும், குதிரையாட்கள் நான்கு மைலுக்கொருவராக வைக்கப்பட்டதாயும்; இவர்கள் வெகு வேகத்துடன் சவுக்கும் கையுமாக, தலையில் கட்டிய மணிகள் குலுங்க, ஓடியதாயும்; இவ்விதம் சுல்தான் தன் நிருபங்களை சீக்கிரம் வரப் பெற்றதாயும் தெரியவருகிறது. ஐந்தே வருஷம் ஆட்சிபுரிந்த ஷர் ஷா வங்காளத்திலிருந்து ஸிந்து வரை இரண்டாயிரம் மைல் நீண்ட ரஸ்தாவை நிர்மாணித்து தபால் போக்கு வரவு சாதனங்களை அபிவிருத்தி செய்திருக்கிறார். ஆக்பரும் வேகமாய் ஓடும் துருக்கி குதிரைகளை இத்தபால் வேலைக்கு உபயோகித்தார். மைசூரில் தபால் சேவகம் அரசாங்க அதிகாரிகளாலேயே கைக்கொள்ளப்பட்டு தபால் சேவகர்கள் பலவிடத்துச் செய்திகளைக் கேட்டறிந்து தலை நகருக்கு சமாசாரங்களை அனுப்பி வந்தார்கள்.

ஆங்கில அரசாட்சி துவங்கிய காலம் முதல் இம்முறைகள் சிறிது சிறிதாகச் சீர்திருத்தஞ் செய்யப்பட்டன. கி. பி. 1766-ம் ஆண்டில் லார்ட் க்ளைவ் தபால் மார்க்கங்களிலுள்ள பல பிராந்திய ஜமீன்தார்களுக்கு கட்டளையிட்டு அவர்கள் காலாட்களை (Mail-runners) அவரவர் பிரதேசத்தில் அமர்த்த வேண்டுமென ஏற்பாடு செய்தார். இவ் ஊழியத்திற்காக செலுத்த வேண்டிய வரிகள் சிறிது குறைத்து வாங்கப்பட்டன. 1774-ம் ஆண்டில் வாரன் ஹேஸ்டிங்ஸ் இம்முறையை மீண்டும் ஒழுங்குபடுத்தி, போஸ்ட்மாஸ்டர் ஜனரல் என்ற ஓர் உத்தியோகஸ்தரை அமர்த்தி சிறிது சீர்த்திருத்தினார். பொது ஜனங்களுடைய கடிதங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு கடிதம் ஒன்றுக்கு நூறுமைலுக்கு இரண்டணா விகிதம் வசூலிக்கப் பட்டது. ஜில்லா அதிகாரிகளான கலேக்டர் களுடைய மேற்பார்வையில் இவ்வூழியம் ஒப்புவிக்கப்பட்டு பலவிதமாய் சேவகம் நடைபெற்றது. தூரத்திற்குத் தகுந்தவாறு விகிதங்கள் வசூலிக்கப் பட்டதாலும் பல விடங்களுடைய தூரங்கள் நிர்ணயமாயில்லாமையாலும், அதிகாரிகளின் மனம்போனவாறு ஜனங்களிடமிருந்து பணம் கவரப்பட்டது. இதனிடையே, பல தனிப்பட்ட ஊழியர் பொது ஜன கடிதப் போக்குவரவை ஏற்று ஊதியம் பெற நோக்கங்கொண்டு முன் வந்தார்கள். 1837-ம் ஆண்டில் கூலிக்கு பொதுஜனங்களின் கடிதங்களை ஏற்றுக்கொள்ளும் உரிமையை அரசாங்கமே கைக்கொண்டு ஏனையோர்களை யடக்கி விட்டார்கள். ஆயினும் வேலை ஒழுங்குற நடைபெறவில்லை. ஊதியமும் நினைத்தவாறு கிடைக்கவில்லை. 1851-ம் ஆண்டில் தபால் நிர்வாகத்தை ஓர் கமிஷன் விவரமாய் ஆராய்ந்து பல சிபார்சுகளை வெளியிட்டது. அதன் பலனாக 1854-ம் ஆண்டில், ஓர் சட்டம் (Post Office Act) இயற்றப்பட்டது. கடிதங்களின் விகிதம் தூரத்தால் மாறுபடாமல் ஒரே விதமாய் விதிக்கப்பட்டது. தபால் நிர்வாகம் பிரதேச அதிகாரிகளிடமிருந்து இந்தியா முழுதும் ஒரே அதிகாரியின் ஆதீனத்திலிருக்குமாறு மாற்றப்பட்டது. கடித விகிதத்தை செலுத்துவதற்கு தலைச்சீட்டு வாங்கி கடிதத்தில் ஒட்டும் முறை கொள்ளப்பட்டது. இவ்வாறு அமைத்ததால் ஊதியம் மிகவும் கிடைக்கத் துவங்கியது. கடைசியாக 1879-ம் ஆண்டில் குறைந்த சமாசாரத்தை எழுதக்கூடிய காலணா கார்டு முற்பட்டது. ஜனங்கள் இம்மாறுதலை எங்ஙனம் வரவேற்றுக் களித்தார்கள் என்பதை நாம் கூறவேண்டுவதில்லை.

மனிதர் வாய்ப்படும் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாடு

[காரைச் சிவனடியார் திருக் கூட்டத்தார்].

மயிலாடு பாறையில் சத்ய வருஷம் தை மாதம் பன்னிரண்டாந் தேதி பகல் மூன்று மணிக்கு மகாநாடு (கான்பரன்ஸ்) நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. அழகான அலங்காரக் கொட்டகை போடப்பட்டிருந்தது. அதிற் பலபக்கங்களிலும் கொடிகள் கட்டப்பட்டும் தோரணங்கள் நாட்டப்பட்டும் பார்ப்பவர் கண்ணைக் கவர்ந்து கொண்டிருந்தன. சுற்றும் பிரதிநிதிகளுட்கார இடம்விட்டு நடுவில் அக்கிராசனருக்கும் உபந்யாசம் புரிவதற்கும் ஒரு பெரிய மேடை போடப்பட்டிருந்தது. வெளிவாசலில் "பிறருக்குத் துன்ப மிழைப்பதே பெரும்பாவம். பரோபகாரமே பிறப்பின் பயன்" என்று எழுதப்பட்டிருந்தது. குறித்த தினத்தன்று காலையிலிருந்தே பிரதிநிதிகள் வந்து கொண்டிருந்தார்கள். பகல் ஒரு மணி முதல் பல உலகங்களிலிருந்தும் வரிசை வரிசையாக விமானங்கள் வந்து கொண்டிருந்தன. சரியாக மூன்று மணிக்கு அக்கிராசனரையும் பிரபலஸ்தர்களையும் ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். அப்பொழுது பிரம்மாண்டமான அந்தக் கொட்டகையில் எள்ளளவும் இடமில்லாது பிரதிநிதிகளும் பார்க்க வந்தவர்களும் நிறைந்திருந்தார்கள். பெருத்த கரகோஷத்தினிடையில் அக்கிராசனரும் மற்ற பிரமுகர்களும் அங்கு வரவேற்கப் பெற்றார்கள். ஆடு கோழி பன்றி முயல் மான் பசு எருமை எலி உடும்பு புறா காசுக்கட்டுக்குருவி கனி தின்னும் வௌவால் முதலிய, மனிதர்களால் கொன்று தின்னப்படும் பிராணிகள் திரண்டு கொட்டகை நிறையக் குழுமியிருந்தார்கள்.

சிவபெருமானுக்கு நெடுங்காலமாக வாகனமாகவும் கொடியாகவுமிருந்து விளங்கிவரும் ரிஷபதேவரும் சிவபெருமானது திருக்கரத்தில் பொலிந்து விளங்கும் திருமான் புலவரும் விநாயகரது வாகனமான மூஷிகப் பிரபுவும் கந்தக்கடவுளது வாகனமும் கொடியுமான ஆட்டப்பதேவரும் கோழியப்ப

நாயனாரும் யமதருமருடைய ஊர்தியான ஸ்ரீ எருமையண்ணனாரும் இந்திரனுடைய செல்வப்பேறான காமதேனு நாச்சியாரும் வேறு பல பிரமுகர்களும் அக்கூட்டத்திற்கு விஜயஞ் செய்திருந்தார்கள். கூட்டம் ஆரம்பிக்கப்பெற்றது. மன்மதனுடைய வாகனமான பஞ்சவர்ணக்கிளி யெழுந்து கேட்டோர் செவி யினிக்குமாறு கடவுள் வாழ்த்துக் கூறியது. உடனே அங்கு கம்பீரமாக முன்னணியில் வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ ரிஷபதேவர் எழுந்து உலகத்திலே ஜனங்களால் மிகுதியும் துன்புறுத்தப்படுவதில் ஆடப்பதேவரின் கோத்திரத்தாரே முதன்மை பெற்றிருப்பதாலும் கலியுக வரதரான ஸ்ரீசுப்பிரமணியக் கடவுளரது ஊர்தியாக விருப்பதாலும் அவரையே அக்கிராசனத் தமர்த்த வேண்டுமென்று பிரேரணை செய்தார். யாவரும் பெருத்த ஆரவாரஞ் செய்ய அப்படியே ஸ்ரீமான் ஆடப்பதேவர் அக்கிராசனத் தமர்ந்து தமது முகவுரைப் பிரசங்கத்தைப் பின்வருமாறு செய்தார்:—

எனது அரிய சகோதரர்களே! இந்தப் பெரிய கூட்டத்திற்கு ஸ்ரீலஸ்ரீ ரிஷபதேவர் முதலிய பெரிய பெரிய தலைவர்கள் விஜயஞ் செய்திருப்பதற்கு நான் மிக்க சந்தோஷமடைகிறேன். நீங்கள் எல்லாரும் இங்கு நிறைந்திருப்பதானது இந்தக் கூட்டம் எவ்வளவு அவசியமான தென்பதையும் உங்கட்கு இதிலிருக்கும் ஊக்கத்தையும் இனிது விளக்குகிறது. நிற்க, இந்த உலகம் உண்டான காலம் முதலாக நாளதுவரைக்கும் நாம் கௌரவமாகவும் பெருந்தன்மையோடும் பலர் மதிக்க வாழ்ந்து வருகிறோம். நம்மவரிற் பலரும், சிவபெருமானுக்கும் பெருமாளுக்கும் விநாயகர் கந்தக்கடவுள் பிர்மா தர்மராஜன் முதலிய பெரிய தெய்வங்கட்கும் வாகனங்களாகவும் கொடிகளாகவுமிருந்து பெருமை யடைந்து வருகிறோம். உலகத்திலுள்ள ஜனங்கட்கும் பேருபகாரஞ் செய்து வருகிறோம். இன்னும் பன்னிரண்டு ராசிகளிலிருந்து உலகத்திலிருக்கிற ஜனங்கட்கு ஜோதிட சாஸ்திர மூலமாக எவ்வளவோ சொல்லமுடியாத நன்மை செய்து வருகிறோம். இந்த நாட்டு ஜனங்கள் இரவுபகலாகத் தோத்திரம் புரிகிற கடவுளர்கள், நம்மிடங் கொண்டுள்ள கருணையினால் அவர்களுக்கும் உயரத்தில், நமக்கு இருப்பிடந்தந்து அவர்களது வரவை நம்மைப் பார்த்தறியும்படியான பெருமையையும் நமக்களித்திருக்கிறார்கள். உண்மை யிப்படியிருக்க இவைகளை யெண்ணாமல் நமது கூட்டத்தாருக்கு மனிதர்கள் துன்பத்தை யுண்டுபண்ணுவதால் இந்தப் பெரிய மகாநாடு மூலமாகப் பல தீர்மானங்களைச் செய்து ராஜாதிராஜராக விளங்கும் கடவுளருக்கும் உலகத்திலுள்ள மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் அனுப்ப வேண்டும். நமது மகாநாடு இனிதுமுடியக் கடவுள் கிருபை செய்வாராக என்று பேசிவிட்டுத் தமது ஆசனத்திலமர்ந்தார்.

திருவள்ளுவநாயனார் திருமூல தேவர் ஸ்ரீராமலிங்க சுவாமிகள் தாயுமானார் புத்தர்பிரான் காந்தியடிகள் சிபிச் சக்கிரவர்த்தி மநுநீதி கண்ட சோழ மன்னன் கொடிபடரத்தேரீந்த பாரிவள்ளல் முதலிய பல ஜீவகாருண்ய சீலர்கள் 'நாங்கள் வர முடியவில்லை; மகாநாடு இனிது நடைபெறட்டும்' என்று அனுப்பியிருந்த தந்திகள் படிக்கப் பெற்றன.

அதன் பிறகு சுப்பிரமணியக் கடவுளது கொடியாகவிருந்து வெற்றியையே கொடுத்து வருகிற ஸ்ரீலஸ்ரீ கோழியப்ப நாயனாரெழுந்து, 'நாங்கள் செய்யும் உதவியை யேற்றுக்கொண்டும், வாயில்லாத ஏழைகளாகிய எங்களிடத்தில் இரக்கங்காட்டியும், நாங்கள் கடவுளுக்கு வாகனங்களாகவும் கொடிகளாகவுமிருந்து வருவதை யுத்தேசித்தும், எங்கள் உயிருக்கு எப்படியும் துன்பம் வராமல் காப்பாற்றும்படி மனிதர்களாகிய உங்களை வணக்கமாக வேண்டிக் கொள்கிறோம்' என்ற தீர்மானத்தைப் பிரேரபணை செய்து கம்பீரமான குரலில் பின்வருமாறு பேசினார்.—அன்பர்களே! இந்த உலகமும் இந்த உலகத்திலே வாழ்ந்து வருகிற மனிதர்களும் நாமும் மற்றையோரும் கடவுளருளாலேதான் பிறந்து வளர்ந்து வருகிறோம். ஆனால் நம் முன்னோர்கள் செய்த தவத்தால் நமது சகோதரர்களுள் ரிஷப தேவர் முதலியோரை சிவபெருமானும், கருடாழ்வார் முதலியோரை விஷ்ணு மூர்த்தியும் மூஷிகப் பிரபுவை மூத்தபிள்ளையாரும், எருமையண்ணனாரை தர்மராஜாவும் நமது அக்கிராசனர் வம்ஸத்தாரையும் எனது குலத்தவரையும் கந்தக்கடவுளும் அபயங் கொடுத்துக் காத்துவருவதோடு, பெரிய முனிவர்களுக்கும் பக்தர்களுக்கும் கிடைக்காத பெரும் பதவியில் வைத்திருக்கிறார்கள். நம்முடைய ஜாதி கேவலமானதல்ல. பரம்பரையாகவே பெருமை பெற்றது. உலகத்து ஜனங்கள் நமது பன்றி வமிசத்தாரைப் புத்தியில் அவ்வளவு சிறந்தவர்களல்லரென்று சாதாரணமாக உண்மை யறியாமல் கருதுகிறார்கள். மகாவிஷ்ணுவானவர், அப்படியல்ல அவர்களே சிறந்தவர்களென்று உலகத்தார் அறிவதற்காகப் பன்றி யுருவமெடுத்து வேதத்தைக் காப்பாற்றினார். பரமசிவன் பன்றிக்குட்டிகளுக்குத் தாமே அவ்வுருவங்கொண்டு பால் கொடுத்துக் காப்பாற்றினார். நமது குலத்தில் நாரைச்சிவமும் கரிக்குருவிப் பெருமானும் மோக்ஷ வின்பம் பெற்றார்கள். கஜேந்திர ஆழ்வார் முதலியோரும் அப்படியே! இப்படிப்பட்ட சரித்திரங்கள் சொல்ல வேண்டுமானால் கோடானு கோடியுண்டு! எந்தப் புண்ணிய ஸ்தலங்களிலும் எந்த பக்தி மார்க்கத்திலும் மோக்ஷ வழிகளிலும் நாம் பெருமை பெற்றுக் கடவுளுக்கு வேண்டியவர்களாகவே யிருக்கிறோம் நாமில்லாவிட்டால் சோதிட சாஸ்திரம் லக்ஷமின்றி இறந்து பட்டுப்போகும். மேலும் நாம் கெட்டவர்களல்ல. நாம் வேறொருவருடைய சொத்துக்கு ஆசைப்படுவது கிடையாது. நமக்கு ஐயறிவுதான் உண்டு என்று தெரியாதவர்கள் சொன்னாலும் நாம் புலாலுண்பது கிடையாது. கள்ளுண்பதில்லை. பொய் பேசுவதில்லை. சூதாடுவதில்லை. யாராவது பக்திமான்கள் துன்பப்பட்டவர்கள் நமது தேவர்களைக் கூப்பிட்டால் வயிற்று வலியானாலும் காய்ச்சலானாலும் உடம்புக்கு முடியவில்லையென்று சொல்வதில்லை. பக்தர்கட்கு அருள் சுரக்க வேண்டுமென்று எப்போது சிவபெருமான் விரும்புகிறாரோ அப்போதே நமது ரிஷப தேவர் தயாரென்கிறார். மனிதர்கள் தமது வாகனங்களிலேற வேண்டுமென்றாலெப்படி யிருக்கிறது? குதிரை யிடக்குப்பண்ணினால் பயணம் நின்றுபோய்விடாதா? நாம் அப்படிச் செய்வதில்லை. நம்முடைய சரித்திரத்தைப் பார்க்கட்டும்! யாருக்காவது கஷ்டத்தை யுண்டாக்கி யிருக்கிறோமா? இல்லவேயில்லை. மேலும் இந்த உலகத்து மனிதர்களுக்கு நம்மை நீ காப்பாற்றுவதற்காகப் பல வழிகளில் உதவி புரிகிறோம். பாலும் மோரும் நெய்யும் அவர்களுணவிற்குக் கொடுக்கிறோம். போர்வைகட்குக் கம்பளி யுரோமங் கொடுக்கிறோம். வயலுக்கு உரம் போடுவதற்கு எருக்களை கொடுக்கிறோம். புத்தகங்கட்கு அட்டைபோட நமது தோல்களையும் கொ

டுக்கிறோம். இப்போது சீனி செய்வதற்கு ததீசி முனிவரைப் போலவே நமது எலும்புகளையும் கொடுத்து வருகிறோம். வாகனமாகவுமிருந்து வருகிறோம். அவர்கள் உண்மையாக பக்தி செலுத்தினால் அவர்களுடைய கடவுளரை நாம் தூக்கிக் கொண்டு வந்து அவர்களுக்கு முன்னே விடுகிறோம். அவர்கள் கண்குளிரக்கண்டு களிக்கிற வரை நாமும் பொறுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் தாயில்லாப் பிள்ளையாயிருந்தால் நமது பாலைக்கொடுத்து வளர்க்கிறோம். இப்படி மனிதருக்குப் பிறந்தது முதல் மோக்ஷத்திற்குப் போகிற வரை உதவிபுரிந்து வருகிற நம்மை அவர்களும் பிள்ளைபோல் வளர்த்துக் காப்பாற்றாமல் வெட்டிக்கொல்வதென்றால் பொறுக்க முடியாத வருத்தமாயிராதா? நான் சுப்பிரமணியக் கடவுளை விட்டுப் பிரிந்ததே கிடையாது. அங்கே பல பக்தரைப் பற்றி உளவாளிகள் பலர் வந்து சுவாமியிடத்தில் பின்வருமாறு சொன்னார்கள். "மகா பக்தர்கள்; இரவு பகலாகக் கோவிலே குடியாக இருக்கிறார்கள்; தொண்டு புரிகிறார்கள்; பெரும் படிப்பாளிகள்; பிரசங்கஞ் செய்கிறார்கள்; வருஷ மொருமுறை கங்கையில் தீர்த்த மாடுகிறார்கள்; கோடி கோடியான பொருளை வாரிவாரித் தருமஞ் செய்கிறார்கள். நாளையோடு அவர்களுக்குப் பூமிவாழ்க்கை முடிகிறது" என்றார்கள். அப்படியே மறுநாள் அவர்கள் புறப்பட்டு எங்கள் ஷண்முகபுரத்திற்கு வந்தார்கள். நமது நாயகர் சுப்பிரமணியக் கடவுள் "அப்பா! இவர்கள் பக்தர்கள் தான் சந்தேகமில்லை; ஆனால் என்னுடைய அடியார்களாகிய ஆடப்பர் கோழியப்பரின் வமிசத்தை முட்டைவரை கருவறுத்திருக்கிறார்கள். ஆதலால் எனக்குமட்டும் செய்த பக்தியைப் பொருட்படுத்த முடியாது; நான் அடியார்க்கடியனாதலால் எனது அடியார்களுடைய மனதைப் புண்படுத்துபவர்களை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்; ஆனால் அவர்கள் உண்மையான பக்தி செய்திருப்பதால் அவர்களை யமலோகத்துக் கனுப்பிவிடுங்கள்" என்று திருவாய்மலர்ந்து அனுப்பிவிட்டார்கள். நமக்கு அங்கே செல்வாக்கில்லாமற் போகவில்லை. அதை இங்குள்ள நமது மனித சகோதரர்களில் சிலர்மட்டும் தெரிந்து கொள்ளவில்லை. நம்முடைய நன்மையையும் அவர்களுடைய நன்மையையும் கருதியே இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறேன். முழுமனதோடு ஆதரிக்க வேண்டுகிறேன், என்று பேசினார். தீர்மானம் ஏக மனதோடு அங்கீகரிக்கப்பெற்றது.

"மற்றவர்களைப்போல் உங்கள் திருவருளால் பிறந்திருக்கிற எங்களை மனிதர்கள் பல வகையாக அவமானப்படுத்தாமலும் ரகசியமாகவும் பஹிரங்கமாகவும் கொலை புரியாமலுமிருக்கும்படி திருவுளம் பற்ற வேண்டுமென்று இந்தக்கூட்டம் மன்றாடுகிறது" என்ற தீர்மானத்தைப் பரமசிவனது திருக்கரத்திருந்து திவ்விய வாழ்க்கை வாழும் செல்வச் சிறு மான்கன்று துள்ளிக்குதித்து வந்து மேடையிலேறிப் பிரேரணை செய்து பின்வருமாறு பேசிற்று:—

எனது துணைவர்களே! உலகத்தில் எல்லா ஜீவராசிகளும் கடவுளது திருவருளாலேயே பிறந்திருக்கின்றன. கடவுளுக்குப் பலவகையிலும் நாம் வேண்டியவர்களாக விருக்கிறோம். பரம்பரைச் சைவ சந்ததியிலே பிறந்திருக்கிற நாம் கெட்ட காரியம் ஒன்றும் செய்வதில்லை. எல்லாருக்கும் உபகாரமே செய்து வருகிறோம். அப்படியிருக்க நம்மை மனிதர்கள் துடிக்கத் துடிக்கக் கத்திகொண்டு கழுத்தை யறுக்கிறார்கள்! திருவிழா வந்தாலும் பிள்ளை பிறந்தாலும் பிள்ளை பிறக்காவிட்டாலும் பொங்கல் வந்தாலும் புதுமை வந்தாலும் எழவு வந்தாலும் கலியாணம் வந்தாலும் படைப்பு வந்தாலும் பதறி விழுந்தாலும் நமது கழுத்துக்குக் கத்தி வருகிறது. நம்மவரெல்லாரிலும் சாதுக்களாயிருப்பவர்கள் ஆடு கோழி வமிசத்தாரே யாவர். அவர்களைத்தான் கண்டபடி மனிதர்கள் கழுத்தறுப்பு செய்கிறார்கள். கலிகால வரதராயும் தெய்வங்களுள் சிறந்தவராகவும் அக்ரமம் செய்பவரை அதம் செய்பவராயும் ஏழைகளைத் தோழமை கொண்டவராயுமுள்ள சுப்பிரமணியக் கடவுளே அவர்களைக் காப்பதாக அடைக்கலங் கொண்டிருக்கிறார். அப்படியிருந்தும் சிவபக்தர்கள் விஷ்ணு பக்தர்கள் ஸ்கந்த பக்தர்கள் விநாயக பக்தர்களென்று சொல்லித் திருபுண்டரதாரணம் செய்து துவாதச நாமமிட்டுக் கொண்டு ஆடுகோழி பாரணை செய்யும் மனிதர்களையும் நாம் பார்க்கிறோம். பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர ஜபஞ்செய்யும் பக்தர்கள் பலர் புலால்கொண்டு தொந்தியை நிரப்புகிறார்கள். சாப்பிடுவதொருபுறங் கிடக்கட்டும்; கண்டபடி கழுத்தறுப்பதை இப்போதே தடுக்க வேண்டுமென்பதுதான் இந்தத் தீர்மானத்தின் கருத்தாகும். பெரிய பெரிய கடவுளர்களால் மதிக்கப்பெற்றிருக்கிறோம். அப்படியிருக்க நமது சந்ததியாரைச் சில ஜனங்கள் கேள்வி முறையின்றித் தாயலறப்பிள்ளையையும் கொல்லுகிறார்கள். கொலைக்குற்றம் செய்தவரை கூட இப்படி ஏககாலத்தில் முச்சந்திகளில் மடக்கிக்கொண்டு ரத்தம் சொரிய அறுப்பது எந்த உலகத்திலும் கிடையாது. அப்படியென்ன குற்றத்தை நம்மவர்கள் மனிதர்களுக்குச் செய்திருக்கிறார்கள். இதைப் பார்த்துக் கொண்டு நாம் சிலர் மட்டும் பெரிய உத்தியோகங்களிலிருந்து பயனென்ன? இதற்கு விமோசன மில்லாவிட்டால் நாமிருந்தாலென்ன செத்தாலென்ன? தன் ஜாதியார் அவமானமடையத் தான் நன்கு வாழ்பவன் ஒரு பிறப்பிற் சேர்ந்தவனே யல்லன். திக்கற்றவருக்குத் தெய்வமே துணையென்றபடி வாயில்லாப் பிராணிகளுக்குக் கடவுள்தான் துணையாதலால் இந்தத் தீர்மானத்தை அங்கீகரித்து நமது தேவர்கட்கு அனுப்ப வேண்டுகிறேன் என்று சபையார் கண்களில் கண்ணீர் சொட்டும்படி உருக்கமாகப் பேசினார். ஏக ஆரவாரத்தோடு தீர்மானம் அங்கீகரிக்கப் பெற்றது.

அக்கிரமம் செய்வாரைத் தண்டித்து நல்வழிப் படுத்துகிற யமதர்மராஜனது வாகனமாயிருக்கிற மகிஷப்பெருமானெழுந்து, "உண்மையில் காளி கறுப்பனாகிய நீங்கள் விரும்பாதிருக்கும்போது உங்கள் பெயரைச் சொல்லி எங்கள் கழுத்தை யறுப்பவர்களை நல்வழிப்படுத்த நீங்கள் முன் வந்து முயற்சி செய்யவேண்டுமென்று வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்" என்ற தீர்மானத்தைப் பிரேரணை செய்து பின் வருமாறு பேசியது:—

எனது அன்பின் மிக்க சகோதரர்களே!

காளியம்மனையும் கறுபண்ணசாமியையும் திருப்திப்படுத்த வேண்டுமென்று கருதிய சில மனிதர்கள் நம்மவரின் கழுத்தை யறுத்து வருகிறார்கள். உண்மையில் காளியம்மன் பராசக்தியின் அம்சமாதலாலும் கருப்பண்ணசுவாமி மகாவிஷ்ணுவின் அம்சமாதலாலும் இருவரும் ஆடு கோழிகளைக்கொன்று ஒருநாளும் மகிழ்வார்களென்று கருத இடமேயில்லை. ஆனால் இவர்கள் குளிக்கப்போய்ச்

சேறு பூசிக் கொள்வதைப் போலத்தான் கடாய்ப் பலி கொடுத்து பாபத்தைக் கட்டிக் கொள்வதோடு தேவர்களின் கோபத்திற்கு ஆளாகிறார்கள். ஆனபடியினாலே இந்தத் தீர்மானத்தைக் காளி கறுப்பண்ணன் முனியய்யா முதலியோருக்கு அனுப்பி, அவர்களை வழிபடும் மனிதர்கள் இனிமேல் எந்தவிதமாகவும் யாருடைய பெயரைச் சொல்லியும் நம்மினத்தவரைக் கண்டிப்பாக வெட்டக்கூடாதென்று உலகத்திலுள்ள மனிதர்கட்கு உத்தரவிடுமாறு வேண்டிக்கொள்ளவேண்டும் என்று பேசியது. இதனைப்பலரும் ஆமோதிக்கவே தீர்மானம் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப் பட்டது.

உலகம் உய்வதற்குக் காரணமான பசுக்களின் தலைவரான ஸ்ரீமதி காமதேனு நாச்சியார் கம்பீரமான நடை நடந்து பலத்த ஆரவாரத்தினிடையில் மேடையிலேறி "முன்னுள்ள பெரியார்களும் தேவர்களும் எம்பெருமானும் ஏழைகளாகிய எங்களிடத்துக் கிருபைகூர்ந்தெழுதி வைத்திருக்கிற நூல்களை யெடுத்து, வருஷத்தில் மூன்று மாதங்களுக்காவது மனிதர்களுக்கு நீங்கள் உபதேசித்து எங்கள் உயிரைக் காப்பாற்றி வரவேண்டுமென்று இந்தக் கூட்டம் மன்றாடுகிறது" என்ற தீர்மானத்தைப் பிரேரணைசெய்து பேசியது பின்வருமாறு:—

அன்பர்களே! சில வருஷங்களுக்கு முன்னால் மனிதரிற் பலபேர் உண்மையறியாமல் பசுமாடுகளைக் கண்டபடி கொலை புரிந்து வந்தார்கள். பசுவினாலே உலகம் அழியாமலிருக்கிறது. பசுவின் உடம்பில் தான் தேவர்களும் முனிவர்களும் எம்பெருமானும் சகல அண்டங்களும் சந்திர சூரியர்களும் வசிக்கிறார்கள். இதனைப்பலரும் அறியாமல் பசுக்களைத் துன்புறுத்தியும் அலட்சியப்படுத்தியும் வந்தார்கள். ஆனால் பெரிய பெரிய புராணிகர்களும் பெரிய மேதாவிகளும் வாக்சாலமுடையவர்களும் வெளிவந்து உண்மையை யெடுத்து ஜனங்களுக்கு விளக்கிக்கூறி வந்ததன் பயனாக இப்போது பசுக்கொலை அநேகமாக நின்றிருக்கிறது. அப்படியே இப்போது புராணிகர்களும், மடாதிபதிகளும், மத சம்பந்தமான சங்கங்களும், பிரசங்கிகளும், சிவபக்தர்களும், இன்னும் இரக்கமுள்ள பெரியார்களும் பிரசாரம் செய்ய முன் வருவார்களானால் மிகச் சில வருஷங்களில் இவ்வநியாயக் கொலை தொலைந்து ஒழிந்து போவதிற் சந்தேகமேயில்லை. ஆதலால் இந்தத் தீர்மானத்தை யங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன், என்று பேசினார். மற்றுஞ் சிலரால் ஆமோதிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பெற்றது.

பின்னர் அக்கிராசனாதிபதியான ஆடப்பதேவர் எழுந்து, "கண்ணியமுள்ள சகோதரர்களே! இன்று நாம் செய்திருக்கிற நான்கு தீர்மானங்களும் மிகச் சிறந்தனவேயாகும். சில நண்பர்களுக்கு இன்னொரு தீர்மானத்தை இவைகளோடு கலந்தே செய்யலாமென்ற விருப்பமிருந்தது. அதாவது புலாலுண்பவர்களுக்கும் அது நியாயமில்லை யென்பதைத் தெரிவிக்கவேண்டுமென்பதாகும். சில அன்பர்கள் இப்போது முதலில் கொலை செய்வதை நிறுத்தும்படி கேட்டுக்கொள்வோம்; மற்றவைகளை அடுத்த கூட்டங்களில் தீர்மானிக்கலாமென்று அபிப்பிராயப்பட்டார்கள். இது முதலாவது கூட்டமாக விருப்பதால் அவ்விஷயங்களைப் பற்றி மறு கூட்டங்களில் பேசி முடிவு செய்வோம். இந்தத் தீர்மானங்களால் சில வகுப்பினருக்கே சாதகமேற்படும். முயல், மீன், கதுவாலி, மான், புறா, உடும்பு, எலி, வாத்து, குருவிகள் முதலியவர்களுக்குத் துன்பமிருந்து வருவதுபோலவே ஆடு கோழிகட்கும் இன்னும் துன்பமிருந்து வருகிறது. ஆனால் ஆடு கோழிகட்கும் எருமை பன்றி பசு முதலிய மற்றுஞ் சிலருக்கும் அதிகமான துன்பம் கொலைப் பலியாலுண்டாயிருக்கிறபடியால் முதலில் கொலையை நிறுத்தவேண்டுமென்ற தீர்மானமே முக்கியமாகக் கருதப்பட்டதென்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. நாம் ஒற்றுமையாக இருந்து மற்ற நன்மைகளையும் அடைய முயலவேண்டும். மனிதர்களுக்கு ஒரு துன்பமும் நம்மாலுண்டாகாதபடியும் மேலும் மேலும் நம்மால் அவர்களுக்கு நன்மையுண்டாகுமாறும் நாம் நடந்துகொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் கடவுள் திருவருள் முன்னிற்கட்டும் என்று தமது முடிப்புரையைப் பேசி முடித்தனர்.

கான்பரன்ஸின் காரியதரிசியாக மான்கன்றை நியமித்தார்கள். முதலாவது தீர்மானம் வாயு பகவானுக்கனுப்பப்பட்டு உலகத்திலுள்ள மனிதர்கள் யாவருக்கும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இரண்டாவது தீர்மானம் பரமசிவன் மகாவிஷ்ணு விநாயகர் முருகக்கடவுள் பிர்மா தேவேந்திரன் முதலிய தேவர்கட்கு அனுப்பப்பெற்றது. மூன்றாவது தீர்மானம் ஐயனாருக்கும் மாகாளராகிய கறுப்பண்ணசாமிக்கும் காளியம்மனுக்கும் அனுப்பப்பட்டு, மற்ற எல்லாக் கறுப்பண்ணர்களுக்கும் பேச்சிராக்காயி முதலிய பெண் தெய்வங்கட்கும் மற்றைய ஐயனாருக்குள் அடங்கிய சகல தேவதைகட்கும் சுற்றுக்கடிதம் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. நான்காவது தீர்மானம் உலகத்திலுள்ள பிரபல புராணிகர்களுக்கும் அனுப்பட்டதுடன் ஸ்ரீசங்கர - ராமானுஜ - மத்வமடங்களுக்கும், தருமபுரம் திருவாவடுதுறை திருப்பனந்தாள் - - - - திருக்கோவலூர் சிதம்பரம் கோவிலூர் முதலிய மடாலயங்கட்கும், ராமகிருஷ்ண மடங்கள், ஸ்ரீ விவேகாநந்தாச்ரமங்கள், மதாபிமான சங்கங்கள், ஜீவகாருண்ய சங்கங்கள், கிறிஸ்தவ சங்கங்கள், மகமதிய உலமாக்கள், தியாசபிகல் சங்கங்கள், ஆரியசமாஜம், பிர்மசமாஜங்கள் முதலிய பல மதஸ்தாபன ஸ்தலங்கட்கும் பத்திராதிபர்கட்கும் நிருபநேயர்கட்கும் இன்னும் பலவகைப்பட்ட மதப்பிரசாரகர்கட்கும் அனுப்பப்பட்டன. பிறகு காரியதரிசி யெழுந்து தங்கள் உத்தியோகத்தினின்றும் ஓய்வு எடுத்துக் கொண்டு பல பல உலகங்களிலிருந்து இங்கு விஜயஞ்செய்திருந்த பெரியார்கட்கும் ஏனையோருக்கும் வந்தனம் கூறினார். கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டு சபை மங்களகரமாக இரவு ஒன்பதீ மணிக்கு நிறைவெய்தியது.

---

25 ரூபாய் இனாம்.

மண்ணெண்ணெய் விளக்கால் நம்மவர்களுக்கு ஏற்பட்டுவரும் எண்ணிறந்த தீமைகளைப் பற்றியும், மற்ற எண்ணெய் விளக்குகளால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும், தமிழில் சிறந்த வியாசம் எழுதுவோருக்கு 25-ரூ. இனாம் அளிக்கப்படும். வியாசங்கள் சுருக்கமாகவும், விளக்கமாகவும் இருக்க வேண்டும்.

பத்திராதிபர், "லோகோபகாரி,"

சென்னை.

‘ காபி ஹோட்டல் ’ குருவானது.

(B. ராமஸ்வாமி)

ஒருநாட் பகல் மூன்று மணிக்கு ‘டிராம்’ வண்டி விட்டிறங்கி, கல்பக பவனத்திற்குள் என் நண்பரும் நானும் நுழைந்தோம். கொஞ்சதூரஞ் சென்றதும், மேஜையின்முன் நாற்காலியில் கட்டுக்கட்டாய் விபூதியணிந்து ஒருவர் உட்கார்ந்திருந்தார். அரையில் நம்பர் மல்; மேலே துயிலே அங்கவஸ்திரம்; காதில் வைரக்கடுக்கன்கள்; பத்து விரலிலும் ரவை மோதிரங்கள்; வலது கையில் சுட்ப ராமய்யர் பதம்; இடது கையில் பொடி டப்பி; மேஜையின் பேரில் சீட்டுக்கள் மாட்டும் கம்பி, ஐந்தாறு கிண்ணங்களில் சில்லரைக்காசுகள்; இவர் தான் காபி ஹோட்டல் எஜமானன். உள்ளே போகும் வழியாய் உள்ளே சென்றோம். சென்று பார்த்தால் கண்களைக்கவரும் காந்த விளக்குகள்; ஓயாமலோடும் மின்சார விசிறிகள், (மான வெளிச்சமும், இயற்கைக்காற்றும் நுழையமுடியாது.) அணியணியாய் வட்ட மேஜைகளும் திட்டமான நாற்காலிகளும், ஒரே காலத்தில் இருநூறு பேர்கள் சாதாரணமாயிருக்கலாம். நாங்களிருவரும் ஒரு மேஜையின் முன்னமர்ந்தோம்.

எனக்கோ பசியில்லை. சும்மா விருந்தேன். ஆகையால் காபி ஹோட்டல் அதிசயங்களைப்பார்க்க எண்ணினேன். எனது நண்பரோ புத்திசாலி. நல்ல மனுஷியன். டிபன் சாப்பிட ஆரம்பித்து விட்டார். அவர் பக்கத்தில், கத்தராடையும், நெக்டை காலரு மணிந்த ஒருவர் வந்து உட்கார்ந்தார். முக க்ஷவரமும் நெற்றியில் ஜவ்வாதுப் பொட்டும், வங்காளித் தலைப்பாகையுட னிலங்கினார். வந்ததும் என் நண்பர், என்ன! எங்கே! என்றார். வந்தவர்: “ என்ன சார் (Sir). இன்னிக்கு வெதர் (weather) ரொம்பச் சில் (chill) லாயிருக்கு, அதற்காகத்தான் ‘கத்தர்’ திக் (thick) காயிருப்பதால் போட்டுக் கொண்டேன். இந்தக் காலத்தில் எல்லாம் வெளிச்சந்தானே ஸார். இன்னிக்கு ஒரு லெக்சர் (lecture) தமிழபிவிருத்தி சப்ஜக்ட் (subject). நான் தமிழ் எம். ஏ. இல்லையோ. நான்தான் லெக்ச்சரர் (lecturer) என்று சொல்லிக்கொண்டே ஒரு கோப்பைக் காப்பியை உறிஞ்சி விட்டார். பாதம் ஹல்வாக் கரண்டி எங்கே தொண்டையில் மாட்டிக்கொண்டு விடுமோவென்று பயந்தேன்; வெளியில் வந்து விட்டது. இந்தப் பிரபுதான் ‘ தமிழபிவிருத்தி ’ யைப் பற்றி பிரசங்கஞ் செய்பவர்.

பக்கத்து மேஜையைச்சுற்றி, கானுடுகாத்தான் நவகோடி நவநீதஞ் செட்டி மகன் மைனர் பால சுந்திரம் உட்கார்ந்திருந்தார். தகப்பனார் மிக்க தனவந்தர். ஒரே புதல்வர், செல்லப்பிள்ளை. பட்டணம் பார்த்துவிட்டு பார்க்கு விளையாட்டை கவனித்து ஊருக்குத் திரும்புவார். இவரைச்சுற்றி இவர் செலவிலேயே காலங் கழிக்கும் நண்பர்கள் பெயரை மட்டும் குறிப்பிடுகிறேன். ஷோக் சுந்திரம், பயில்வான் பட்டு, டாபர் சாமா, அவுட்புலி அப்பனையங்கார்.

இன்னுமொரு பக்கம், கப்பல் முழுகிக் கவலையிலாழ்ந்து கையைத் தலையில் வைத்த கோமுட்டி ஒருவன், கக்ஷிக்காரர் புடைசூழ, லக்ஷியமில்லாமல் பக்ஷியங்களை உள்ளே தள்ளும் நியாயவாதி ஒருவன், கேசில் ஜெயித்த பாப்பர் (Pauper) ஒருவன், தோற்றத்த பாப்பரொருவன், இன்னும் ஆணும் பெண்ணும், எச்சில் மயமான தட்டும், ஸ்பூனும் (கரண்டியும்) குவியக்கண்டேன்.

கொஞ்சம் அண்ணாந்து சுவற்றைப்பார்த்தேன். மனத்தைத் தலைக்கும் மங்கையர் படங்களும், வரைவின் மகளிர்தம் (Wantons) வண்ணப்படங்களும், கண்ணன் படமும் வரிசையாய் கண்டேன்.

இவ்விடம் விட்டுச் சமையலைப் பார்க்கப்புறப்பட்டேன். போகும் வழியில் ஈரத்தில் மொய்க்கும் ஈயும் எறும்பும், கூடிக்குலாவும் புழுவின் குழாமும், எச்சில் தொட்டியாம் நச்சுத்தொட்டியைக் கண்டேன். வயிற்றைக் குமட்டியது. என்றாலும் உள்ளே சென்றேன்.

பக்ஷணஞ் செய்வதில் தங்கப் பதக்கம் பெற்ற லக்ஷ்மணன் இருப்புச் சட்டிமுன் பலகையின் பேரில் வீற்றிருந்தான். சுமார் நாலு வீசை குசும்பா யெண்ணெயை ஒய்யாரமா யுயர்த்தினான் தொப்பென்று விழுந்தது. திரும்பிப்பார்த்தான். ஜாடைசெய்தான். தண்டச்சோற்று த்தடிராமன் ஓடோடியும் வந்தான். சுருணையால் துடைத்தான். அரட்டை யடிக்கும் பரட்டை (வேலைக்காரி)யிடம் பாத்திரத்தை உருட்டிவிட்டான். ஒரு பக்கத்தில் சொரிபிடித்த மாரி என்பவள் இட்டிலி மாவையும், சாளைவாய் பெருகும் காளி என்பவன் வடைமாவையும், அறைத்துக் கொண்டிருந்தார்கள்.

இதைப் பார்த்துவிட்டு வெளியே போகும்வழியாய் என் சினேகிதரும் நானும் புறப்பட்டு விட்டோம். ‘ இரண்டுபேர் எட்டணா ’ வென்று ஏலங் கூறுவதுபோல் உறத்த சத்தங்கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினேன். இதற்குள் என் நண்பர் புன்சிரிப்புடன் எஜமானர் மேஜையின்மேல் எட்டணாவையும் ஒரு சீட்டையும் வைத்தார்.

திரும்பினோம். காலணாத் தாம்பூலம் கார்த்துக் கொண்டிருந்தது. புனுகும், சவ்வாதும் சாசமான விலை, யென்றான் சிகப்பு மூட்டைச் சாயபு. பகல் டிக்கட்டு சீப் (cheap); ராயல் தியேட்டரில் டம் பாச்சாரி; ஒத்தை வாடையில் மனோஹரன்; வாவென்றழைக்கும் வெல்லிங்க்டன் சினிமாவில் எட்டிபோலோ (Eddie Polo) என்றானொரு சிறுவன்.

ஒருவாறு நாலு மணிக்கு வெளியில் வந்தோம் சூரிய வெளிச்சத்தைக் கண்டோம்.

இந்தக் காபி ஹோட்டல் எனக்குக் குருவானது எப்படியெனில்: என்னிடம் அசுத்தக் காற்றும், ஈயும், எச்சிலும், குசும்பா யெண்ணையும் கூடி விட்டது. ஸத்ஸங்க மென்பது என்னிடத்தில் பார்க்கமுடியாது. உலகிலுள்ள விஷநோய்களெல்லாம் என் மூலமாய் பரவிவிட்டது. “ என்னை நீ மறந்தால் நற்கதி யடைவாய்” யென்று பரமகாருண்யத்தோடு உபதேசம் செய்தது.

செழும் பெரும் பொய்கையுள் வாழினுமென்றும்
வழும்பறுக்க கில்லாவாந் தேரை—வழும்பில்சீர்
நூல் கற்றக் கண்ணு நுணுக்கமொன் றில்லாதார்
தேர்கிற்கும் பெற்றி யரிது.

—நாலடியார்.

உலக நடை

(தொடர்ச்சி)

மகாயுத்தத்தில் ஐரோப்பிய நாடுகளெல்லாம் போரில் கலந்து, தங்கள் கைத்தொழில்களை சீர்குலைய விட்ட பொழுது, சுவீடன் தேசம் மட்டும் யுத்தத்தில் தலையிடாது நடு நிலையை வகித்து தன் கைத் தொழில்களை அபிவிருத்திசெய்து சரக்குகளை தேக்கி வந்தது. யுத்தம் நின்றவுடன் சரக்குகளை மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி வியாபார முதன்மையை தாங்களே கவர்ந்து விடலாம் என இந்நாட்டினருடைய நோக்கம். பாவம், இவர்கள் கருதியவாறு பலிக்கவில்லை. யுத்தத்தால் ஏழ்மை யடைந்த நாட்டாருக்கு சரக்குகளை வாங்க திரவியம் ஏது. சுவீடன் இரண்டு வருஷங்களாக சரக்குகளை தேக்கி வைத்துக் கொண்டு, புதிதாக சரக்குகள் உற்பத்தி செய்யக் கூடாமல் வேலையாளர்களுக்கு வேலைகொடுக்கத் திறனற்று வருந்திவந்தது. இப்பொழுது ஒருவாறு இக்கஷ்டங்கள் தீர்ந்து தொழிற்சாலைகள் வேலை துவக்கியிருக்கின்றன.

ஆண்டிஸ் என்ற மலைத்தொடரின்மேல் சமுத்திர மட்டத்துக்கு இரண்டு மைல் உயரத்திற்கு அப்பால் வசிக்கும் மனிதர்களுடைய தேக அமைப்பை ஆராய்ந்த சாஸ்திர நிபுணர்கள், அவ்விடத்து மனிதர்களின் விலா என்புகள் நமக்குள்ளவாறு சாய்வான வரிசையில் அல்லாமல் செங்குத்தாகவிருக்கின்றன வெனக்கண்டறிந் திருக்கிறார்கள். இவ்வித மிருப்பதால்தான் பளுவான சாமான்களையும் தூக்கிக்கொண்டு செங்குத்தான மலைகள் மேலும் ஏறிச் செல்ல சக்தி பெற்றிருக்கிறார்களாம். தேகப் பிரகிருதியும் வேலைக் கேற்றவாறு மாறுபடுகின்றதென இதனால் அறிந்துகொள்ளுகிறோம்.

ஜினீவாவில் யூதர்கள் துருக்கிப் பிரதிநிதியான இஸ்மேட், பாதுஷாவை விருந்தினராக வரவேற்று உபசரித்து கூறிய மொழிகள் அந்நிய மதத்தினரிடம் துருக்கியருக்கிருக்கும் இரக்கத்தையும் உதார குணத்தையும் விளக்குகின்றன. ஸ்பெயின் தேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட யூதர்களுக்குத் தங்க இடமும் சம சுதந்திரமும் கொடுத்துப் பாராட்டிய துருக்கியர்களைப் புகழ்ந்த யூதர்களே இப்போது துருக்கியரிடத்தில் வல்லரசுகள் கொண்டுள்ள மாறெண்ணங்களை ஆதரவற்றவையென வெளிப்படுத்துகிறார்கள். துருக்கியர் தங்கள் நாடுகளிலுள்ள சிறுபான்மையோராகிய வேற்று ஜாதியினரை வருத்தாமலிருக்கவேண்டும் எனவும் அதற்காக ஜாமீன் ஏதாவது கொடுக்க வேண்டுமென லார்ட் கர்ஸன் வற்புறுத்துகிறார்கள்.

துருக்கிப் பிரதிநிதி பன்முறை இச்சிறுபான்மையோர்கட்கு தங்கள் நாட்டில் ஒரு தீங்கும் நிகழாதென வாக்குறுதி செய்திருக்கிறார். துருக்கியருக்குள்ள உரிமைகட்கும் மேலான விசேஷ உரிமைகளை யளிக்கச் சம்மதப் படவில்லை யென்பதைத் தவிர சிறுபான்மையோர்களை ஒரு விதத்திலும் வருத்தமாட்டோமென வாக்குறுதி செய்தும் லார்ட் கர்ஸான் துருக்கியர் இணங்காவிடில் சமாதான மகா நாட்டைக் கலைத்து விட்டுப் போய் விடுவதாயும், பிறகு துருக்கியரிடம் எவரும் அனுதாபமடைய மாட்டார் களெனவும் பய முறுத்தியதின் நோக்கம் யாதென விளங்கவில்லை. துருக்கியர்களோ வெகு பணிவுடன் சமாதானத்தையே நாடி வந்திருக்கிறார்கள். பல விஷயங்களில் இணங்கியுமிருக்கிறார்கள்.

தக்ஷிணமித்திரன்

இதற்கு முன் (South Indian Mail) என்ற பெயருடன் இங்கிலீஷில் பிரசுரம் செய்யப்பட்டு வந்த பத்திரிகை சென்ற மாசிமீ முதல் தமிழில் தக்ஷிணமித்திரன் யென்ற பெயருடன் பிரதி திங்கட்கிழமையும் மதுரையில் பிரசுரம் செய்யப்படுகிறது. மதுரை கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராயிருந்த ஸ்ரீமான் ஈ. அருணாசலமய்யர் ஆசிரியராவர்.

ஸ்திரிகளுக்காக நவீன நாவல் பத்திராதிபரால் எழுதப்பட்டு வருகிறது.

இதில் ராஜீய பொதுஜன நலம், கல்வி, சிற்பம் முதலிய எல்லா விஷயங்களைப் பற்றியும் அரிய வியாசங்களும் தென் இந்திய சரித்திர ஆராய்ச்சி கண்ணோட்டம் முதலிய விஷயங்களும் பலவூர் சங்கதிகளும் பிரசுரமாகும்.

சந்தா விபரம்

உள்ளூர்	வருஷம்	1-க்கு	ரூ	5—0—0
வெளியூர்	,,	,,	,,	6—0—0
பினாங்கு முதலிய அந்நிய நாடுகளுக்கு வருஷம்		1-க்கு	ரூ	8—0—0

மற்ற எல்லா விவரங்களும் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்

தக்ஷிணமித்திரன்

மதுரை.

நீங்கள்

உயர்ந்த பட்டுப் பட்டாடைகள் சகாயவிலையிலும் விலைக்குத்தக்கபொருள்
களாகவும் அடைய விரும்புகிறீர்களா? அப்படியானால், சென்ற 7 வருஷகாலமாக மிக
கியாதியோடும் நாணயமாகவும், நடந்துவரும் காசி பாலாஜி அண்டு கம்பெனியாருக்கு
எழுத மறந்து விடாதீர்கள். உடனே விலைவிபர ஜாப்தாவுக்கு எழுதுங்கள். 1923ம்
வருஷ காலண்டர் ½ அணா ஸ்டாம்பு அனுப்புவோர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.

BALAJEE & Co.,

Silk Emporium, Benares City.

Branch :—336, தம்பு செட்டித் தெரு, சென்னை.

Tel:—BALAJEE.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினுல், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனும்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோரதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்தியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்கள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	×25"	ரூ 2½	முதல்	ரூ 3	வரை
,, 2.	12 ,,	×27"	,, 4	,,	6	,,
,, 3.	16 ,,	×34"	,, 6	,,	9	,,
,, 4.	18 ,,	×36"	,, 8	,,	12	,,
,, 5.	20 ,,	×44"	,, 11	,,	13	,,

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: '**Shree**'

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45"	ரூ 4½	முதல்	ரூ 6	வரை
9½ ,,	× 40"	,, 3	,,	5	,,
3 ,,	× 1½ கஜ	,, 2	,,	3	,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக்கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

GOOD SEEDS

As good as can be grown. Sow the right kind of seed at the right season and save disappointment. We have just the right kind of seeds for Indian climate both flower and vegetable.

Beautifully illustrated large descriptive catalogue free on application. (Please mention this paper when writing and correspond in English only.)

Pestonjee P. Pocha & Sons
Seed Merchants, POONA.

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras
(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராகச் சேர்ந்து நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ1000 பாலிஸிக்கு ரூ15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
Manager.

K. S. MUTHIAH & Co.,

Silk House, Benares City.
Branches:—**MADRAS & TINNEVELLY.**

எங்களிடம் சகல விதமான பட்டு பீதாம்பர புடவைகள், நாகரீகமான புதிய மாதிரி புடவைகள் (நவீன கலர்களில்) ரவிக்கை குட்டைகள், வெண்பட்டு தினுசுகள், கார்மடி தினுசுகள், ருத்திராக்ஷ மாலைகள், முதலிய சகல தினுசுகளும் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். உடனே எங்கள் கேட்லாக்கை தருவித்து பாருங்கள்.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
சில்க் ஹவுஸ், காசி.
பிராஞ்சு:—தபாற் பெட்டி 99, சென்னை.
போன் 1216 சென்னை.